அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 13/2008(VI)

எனது இல : EST-6/05/TPR/1020
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான எரிபொருள் வழங்குதலும், அவ் வாகனச் சாரதிகளுக்கான மேலதிக நேர மற்றும் இணைந்த படிகளை செலுத்தலும்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2019.05.31 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 13/2008(V) குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். மேற்படி சுற்றறிக்கையின் பத்தி 02(அ), 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு ஏற்ப பின்வருமாறு திருத்தப்படுகிறது:

02(அ) - பெட்ரோல்/ டீசல் வாகனங்களைப் பயன்படுத்தும், இணைக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகன உரிமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு பின்வருமாறு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும்.

<table>
<tr><th>உரிமை பெறும் உத்தியோகத்தர்கள்</th><th>ஒரு மாதத்திற்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் லீட்டர் அளவு</th><th>எரிபொருளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்ச மாதாந்த கொடுப்பனவு</th></tr>
<tr><td>அமைச்சின் செயலாளர் அல்லது அதற்கு இணையான அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர் / மாகாண பிரதம செயலாளர்</td><td>220</td><td rowspan="4">ஒருமாதத்திற்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் லீட்டர் அளவு X மாதத்தின் முதல் நாளில் எரிபொருள் விலை</td></tr>
<tr><td>மேலதிக செயலாளர்கள் அல்லது அதற்கு இணையான அதிகாரிகள்</td><td>165</td></tr>
<tr><td>திணைக்களத் தலைவர்கள் அல்லது அதற்கு இணையான அதிகாரிகள்</td><td>135</td></tr>
<tr><td>செயலாளர்களின் ஒருங்கிணைப்பு செயலாளர்கள்</td><td>115</td></tr>
</table>

02. இந்த திருத்தங்கள் 2022.01.01 முதல் நடைமுறைக்கு வரும் என்பதுடன், பொது நிர்வாக சுற்றறிக்கை 13/2008(V) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அதே முறையில் நடைமுறையாகும்.

03. இந்த சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு